**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 85 of 2017

Deposition of D.W.2

Name of the Witness: திருமதி.பூங்கொடி

Date : 04.03.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2) கிருஷ்ணன் (எ) கிருஷ்ணராஜ் என்னுடைய அப்பா. என் அப்பாவிற்கு 01.06.1959ல் பாகம் ஏற்பட்டது பற்றி தெரியும். என் அப்பாவிற்கும் அவரது உடன் பிறந்தவர்களான சாம்ராஜ், ராஜன், யுவராஜ், என் அப்பாவுக்கும் பாகம் ஏற்பட்டது. இனவரசன், ரகு என் தாத்தாவின் இரண்டாவது மனைவியின் பிள்ளைகள் என்றால் சரிதான். 1959ல் பாக பிரிவினையில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. ஆனால் என் அப்பாவிற்கும், அவரது அண்ணன் தம்பிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலே அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது.

3) தாவா சொத்துக்கள ஆதியில பெரியசாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்டது, அது என அம்மாவின சொத்து. 1.6.1959 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் படி கண்டுள்ள சொத்துக்களை நான் பாகபிரிவினை கேட்கவில்லை. அந்த சொத்துக்கள் இன்னும் பாகம் பிரிக்கப்படவில்லை. என் அப்பாவிற்கு வந்த சொத்துக்கள் பாகம் பிரிக்கவில்லை. என் சித்தப்பாவிற்கு வந்த சொத்துக்களை அவர் பாகம் பிரித்து கொண்டார். பெரியசாமிகவுண்டர் என் தாத்தாவுடன் பிறந்தவர். எனக்கு தெரிந்து பெரியசாமிகவுண்டருடன் பிறந்தவர் ராஜகோபால்கவுண்டர். ராஜகோபால் கவுண்டருடன் எத்தனை பேர் பிறந்தவர்கள் என்று எனக்கு தெரியாது.

4) பெரியசாமிகவுண்டருக்கு சொத்துக்கள் பாத்தியம் என்பதற்கு ஆவணம் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என் வழக்கறிஞர் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளரா என்று அவரை கேட்டால் தான் தெரியும், பெரியசாமிகவுண்டருக்கு சொத்துக்கள் பாத்தியம் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பெரியசாமிகவுண்டர் எப்படி என் அம்மாவிற்கு சொத்தை கொடுத்தார் என்று தெரியாது. என் அம்மாவை பெற்ற ராஜகோபால்கவுண்டர் சொத்துக்களை கொடுக்கும் போது அதில் ராஜன், சாம்ராஜ், அலமேலு, என் அம்மா பங்கு போட்டார்கள். அது ராஜகோபால்கவுண்டர் முன்னிலையில் நடந்தது. என் தாத்தா ராஜகோபால்கவுண்டர் என் அம்மாவிற்கு கொடுத்த பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். அது என்ன பத்திரம் என்று தெரியாது, கொடுத்ததாக சொன்னார்கள். எனக்கு அப்போது சிறிய வயதாக இருந்ததால் கேட்டு தெரிந்து கொண்டேன்.

5) என் அப்பா எந்த காலத்தில் இறந்தார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு 1971ல் தை மாதம் திருமணமானது. நான் என் அம்மாவிற்கு 2வதாக பிறந்தேன். என்னுடைய அக்கா பெயர் விஜயா. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பாகவே என் அக்காவிற்கு திருமணமானது. என் தங்கை அழகுராணிக்கு எப்போது திருமணமானது என்று நியாபகம் இல்லை. எனக்கு திருமணமாகி 4, 5 வருடங்கள் கழித்து அவருக்கு திருமணம் ஆகிறது. அழகுராணிக்கு சௌந்தர்ரோஜா பிறந்தவர், அவர் இறந்து விட்டார். அழகுராணிக்கு திருமணம் ஆகி 4, 5 வருடங்கள் கழித்து சௌந்தர்ரோஜாவிற்கு திருமணம் ஆகி இருக்கும். என் அப்பா

1960ல் இறந்திருக்காலம் என்றால் இருக்கலாம். என் தம்பி ராஜவேலு வேலையில் இருந்தார். என் தம்பி திருச்சியில் ஆர்டினரி கம்பெனியில் வேலையில் இருந்தார் என்றால் வேலை செய்தார், ஆனால் வேலைக்கு ஒழுங்காக போகவில்லை.

6) 1959ல் என் அப்பாவிற்கு பாகமாக வந்த சொத்துக்களில் என் தம்பி அவர் சம்பாதித்த பணத்தில் வீடு, கடை கட்டினார் என்றால் சரியல்ல. என் தம்பி எந்த செலவும் செய்யவில்லை. என் அம்மா லேவாதேவி தொழில் செய்து வந்தார் என்றால் ஆமாம். என் அம்மா லேவாதேவி செய்து வந்த பணத்தில் எனக்கும் என் சகோதரர்களுக்கும் 50 சவரன் நகை போட்டார் என்றால் இல்லை. எல்லோருக்கும் 3 சவரன் நகை போட்டார். சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்பதற்காக அவருடைய வேலையில் இருந்து விருப்ப ஓய்வு பெற்று தாயாருக்கு உதவியாக இருந்து அபகரிப்பு செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் அம்மா நிறைய சொத்துக்களை விற்றார் என்றால் சரிதான். விற்று வந்த பணத்தில் கடைகளை கட்டி உள்ளார். என் அம்மா சொத்துக்களை விற்று தான் எங்களுக்கு திருமணம் செய்து வைத்து நாங்கள் வந்து போகும் போது செலவு செய்வார் என்றால் சரியல்ல.

7) ராஜிவேலு 07.07.2002ல் வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். என் அம்மா லேவாதேவி செய்து வந்த பணத்தை அவர் தான் வைத்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். என் அம்மா செயின், மோதிரம், வளையல் என்று 25 சவரன் நகை வைத்திருந்தார். லேவாதேவி செய்து வந்த பணத்தில் என் அம்மா ரொக்கமாக எவ்வளவு வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. என் அம்மா ராஜிவேலு

குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் ராஜிவேலு திருமணம் ஆகும் வரை அங்கிருந்தார். பின்பு வாடகை வீட்டிற்கு சென்று விட்டார். என் அம்மா அழகுராணி வீட்டில் கொஞ்ச நாளும், சௌந்தர்ரோஜா வீட்டில் கொஞ்சம் நாளும் இருந்தார். என் அம்மா சௌந்தர்ரோஜா வீட்டில் தான் இருந்தார். என் அம்மாவையும் அழகுராணியும், சௌந்தர்ரோஜாவும் கவனிக்காமல் அவரிடம் இருந்த பணம், நகையை பிடுங்கி கொண்டு விட்டார்கள் என்றாலும், வாதிகள் தான் தாவா சொத்தில் என் அம்மாவை கவனித்து கொண்டு வந்தார்கள் என்றாலும், அப்போது தான் என் அம்மா இறந்து விட்டார் என்றால் சரியல்ல. என் அம்மாவின் இறுதி சடங்கு தாவா சொத்தில் தான் நடந்ததா என்றால் இல்லை. வாதிகள் அவர்கள் வீட்டிற்கு எடுத்து சென்று விட்டார்கள்.

8) என் அம்மா தாவா சொத்தில் உள்ள கடைகளுக்கு 15 ஆண்டுகள் வாடகை வாங்கி வந்தார் என்றால் சரிதான். என் அம்மா மகனின் பிள்ளைகளின் படிப்பிற்கும், வேலைக்கும் அவர் தான் செலவு செய்தார். என் அம்மாவிடம் லேவாதேவி தொழில் செய்த பணத்தையும். வாடகை பணம் ரூபாய் ஒரு கோடி இருந்தது என்றும், அதை எனது சகோதரிகள் பாகம் பிரித்து கொண்டும் அதில் எனக்கும் பாகம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி வெங்கடேஸ் காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அழகுராணி காவல் துறையில் எஸ்ஐ ஆக இருந்து ஓய்வு பெற்று விட்டார் என்றால் சரிதான்.

9) 6ம் பிரதிவாதி காவல் துறையில் இருப்பதை பயன்படுத்தி கொண்டு 11ம் பிரதிவாதியை அலுவலகம் அனுப்பினார் என்றால் சரியல்ல. என் அம்மா 2017ல் ராஜிவேலுக்கு ஒரு பாதியையும், மீதி பாதியை எங்கள் நால்வருக்கும்

உயில் மூலமாக எழுதி கொடுத்து விட்டார். கட்டிடம் வாதிகளுக்கும், காலி ஜாகா எங்களுக்கும் என் அம்மா எழுதி கொடுத்து விட்டார். வாதிகள் என் சகோதரி அழகுராணியும், வெங்கடேசும் போலிசை வைத்து மிரட்டியதால் வாதிகள் காவல் துறையினருக்கு அறிவிப்பு கொடுத்து அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை.

10) 01.06.1959லே என் அப்பாவுடன் பிறந்தவர்களுக்கு பாகம் ஏற்பட்டு விட்டது என்றால் சரிதான். 1967ல் சாம்ராஜின் மனைவி அலமேலு, ராஜன், யுவராஜ் இடையே பாகபிரிவினை மோசடியாக ஏற்படுத்தியுள்ளனர் என்றால் அலமேலு யுவராஜ் சொத்தை அவருக்கு வேண்டும் என்று சண்டை போட்டு வாங்கி கொண்டார். குடும்ப உறுப்பினர்கள் இல்லாமல் என் அம்மா, அலமேலு 1967 பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்த உரிமையில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணமே மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல.

11) பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் அப்பாவுடன் பிறந்தவர்கள் பாகம் பிரித்து கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பெரியசாமி இறந்து போய்விட்ட பிறகு என்னுடைய தாத்தா ராஜகோபால் என் அம்மா மங்கம்மாள் அவரது கணவர் இறந்து விட்டதால் பெரியசாமியின் சொத்தை என் அம்மாவிற்கும், அலமேலு, யுவராஜ், சாம்ராசுக்கு கொடுத்து விட்டார். சாம்ராஜ் பங்கை சாம்ராஜ் வாங்கி கொண்டார், யுவராஜ் பங்கை அலமேலு வாங்கி கொண்டார். இந்த விவரத்தை என் பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. என் அம்மா 17.10.1967 பத்திரத்தில் தரப்பினராக இருப்பதற்கு எந்த விதமான

முகாந்திரம் இல்லாததால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

12) என் தாத்தா என் அம்மாவிற்கு சொத்தை கொடுத்ததால் என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து என்று சொல்கிறேன். என் அம்மாவிற்கு உயில் எழுதி வைத்துவிட்டார். அதில் தான் பாகம் கேட்கிறேன். அந்த உயிலை என் வழக்கறிஞரிடம் நான் கொடுத்துள்ளேன். அதை வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். அந்த உயில் பத்திரத்தில் கண்டுள்ள சர்வே எண், விஸ்தீர்ணம் தெரியாது. 17.10.1967 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் மோடியானது என்பதால் அதில் சர்வே எண், விஸ்தீர்ணம் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றாலும், அது அமுலுக்கே வரவில்லை என்றால் சரியல்ல.

13) என் அம்மா 2016 கடைசியில் உடல்நிலை பாதிக்கப்பட்டு புத்தி - சுவாதீனம் இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல, என் அம்மா நன்றாக தான் இருந்தார். என் அம்மாவிற்கு உடல்நிலை மற்றும் மனநிலை சரியில்லாததை பயன்படுத்தி 2 முதல் 6 பிரதிவாதிகள் சேர்ந்து சர்வே எண் 251/1ல் 816 சதுரடி மோசடியாக தானபத்திரம் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த தான பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது. 6.7.2017 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுப்பதற்கு எனது அம்மாவிற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அந்த பத்திரம் எனது அம்மா சுய நினைவு இல்லாமல் இருந்த போது நாங்கள் தயாரித்து கொண்டதால் அந்த பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.இந்த

செட்டில் மெண்ட் பத்திரம் வாதிகள் *20.5.2017* அன்று சட்ட அறிவிப்பு கொடுத்த பிறகு பிரதிவாதிகள் நாங்கள் மோசடியாக பின்னிட்டு தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் உள்ள கடைகளில் வரும் வாடகைகை வாதிகள் சார்பாக *2*ம் வாதி வாங்கி அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதில் ஒரு கடையை டாஸ்மார்க் கடைக்கு வாடகைக்கு விட்டுள்ளார்கள் என்றால் சரிதான். என் அம்மா *12.12.2022*ல் இறந்து விட்டார் என்றால் சரிதான்.

*14)* தாவா சொத்துக்கள் எல்லாம் என் தம்பிக்கு பாகமாக கொடுத்த சொத்துக்கள் என்றாலும், என் அம்மா அவருடைய பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை விற்று தான் திருமணம் செய்தும், எங்களின் பிள்ளைகளின் படிப்பு செலவிற்கும் செலவு செய்தார் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்துக்களில் பாகம் கேட்ட எந்த உரிமையும் இல்லை என்றாலும், முழுக்க முழுக்க வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. *17.10.1967* தேதியிட்ட பாக பிரிவினை பத்திரமும், *06.07.2017* தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரமும் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாமல் என் சகோதரிகள் கேட்டு கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*15)* என் அப்பா *1960*ல் இறந்து விட்டதாலும், *1989*க்கு முன்னால் திருமணம் ஆகிவிட்டது என்றாலும், பாகம் கொடுக்க வேண்டும் என்றால் எங்களுக்கு சொற்ப பாகம் தான் கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.